புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# இறையனார் களவியல் உரை காட்டும் சமூகம்

*முனைவர் இரா.ஜானகி*
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை, அறிவியல் & மானுடவியல் கல்லூரி,*
*வடபழனி வளாகம்,SRMIST*

=====================================================================

*ஆய்வுச்சுருக்கம்:*

*தொல்காப்பியம் இருக்க சுருக்கமான முறையில் 60 சூத்திரங்களில் தமிழ் அக மரபை தனித்து பேசக்கூடிய முதல் முழுமையான நூலாகவும் இறைவனால் (அழலவிர் சோதி அருமறைக் கடவுள்) எழுதப்பட்ட நூலாகவும் தமிழில் கிடைக்கக்கூடிய முதல் இலக்கண உரையாகவும் விளங்குவது இறையனார் களவியல் நூல் மற்றும் உரையாகும். சங்க காலத்திற்குப் பிறகு களப்பிரர்கள் ஆட்சியால் வீழ்ச்சி அடைந்த பாண்டியர்கள் தம் ஆட்சியை மறுகட்டமைப்பு செய்ய தமிழ் மொழித் தொன்மத்தோடும் சைவ சமயத்தோடும் தம்மை இணைத்துக்கொண்டு பாண்டியர்களின் புகழை முன்னிலைப்படுத்தும் தன்மையில் இறையனார் களவியலை உருவாக்கியுள்ளனர் எனலாம். இப்படியான பின்புலத்தில் கி.பி.8 ஆம் நூற்றாண்டில் தோன்றிய களவியல் நூல் மற்றும் உரையில் வெளிக்காட்டப்பட்டிருக்கும் சமூக நிலைப்பாடுகளுள் குறிப்பாக களவியலில் பிரிவும் சமூகக் கட்டமைப்பும், களவியல் பேசும் ஆண் - பெண் வரையறைகள், அன்றைய வாழ்வியல் நடைமுறையில் பழக்கப்பட்டிருந்த நம்பிக்கைகள் மற்றும் மக்கள் புழங்கிய பொருட்கள் என்பன போன்றவற்றை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. இதன்வழி களவியல் நூல் மற்றும் உரையாசிரியர் தன்னுடைய காலச்சூழலுக்கு ஏற்ப தன் உணர்வை சைவப் பின்புலத்தோடும் மேட்டிமைக்குடிக்கான காதல் வரையறையை வலிந்தும் வெளிப்படுத்தியிருப்பதை அறியமுடிகிறது.*

*தமிழ் இலக்கண வரலாற்றில் தொல்காப்பியத்திற்கும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றி மறைந்த அனைத்து நூல்களுக்கு இடையிலும் தனித்து இன்றளவும் முழுமையாக நிலைத்து நிற்கும் ஒரே இலக்கண நூல் இறையனார் களவியலே ஆகும். தொல்காப்பியம் இருக்க சுருக்கமான முறையில் 60 சூத்திரங்களில் தமிழ் அக மரபை தனித்து பேசக்கூடிய முதல் முழுமையான நூலாகவும் இறைவனால் (அழலவிர் சோதி அருமறைக் கடவுள்) எழுதப்பட்ட நூலாகவும் தமிழில் கிடைக்கக்கூடிய முதல் இலக்கண உரையாகவும் விளங்குவது இறையனார் களவியல் நூல் மற்றும் உரையாகும். சங்க காலத்திற்குப் பிறகு களப்பிரர்கள் ஆட்சியால் வீழ்ச்சி அடைந்த பாண்டியர்கள் தம் ஆட்சியை மறுகட்டமைப்பு செய்ய தமிழ் மொழித் தொன்மத்தோடும் சைவ சமயத்தோடும் தம்மை இணைத்துக்கொண்டு பாண்டியர்களின் புகழை முன்னிலைப்படுத்தும் தன்மையில் இறையனார் களவியலை உருவாக்கியுள்ளனர் எனலாம். குறிப்பாக இறையனார் களவியல் உரை சைவம் – தமிழ் – பாண்டியர் என்னும் இம்மூன்று இணைவுகளை முன்னிலைப்படுத்தினாலும் அது தோன்றிய காலச்சூழலின் பண்பாட்டுப்பதிவுகளை தேவையான இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே கி.பி.8 ஆம் நூற்றாண்டில் தோன்றிய களவியல் நூல் மற்றும் உரையில் வெளிக்காட்டப்பட்டிருக்கும் சமூக நிலைப்பாடுகளுள் குறிப்பாக களவியலில் பிரிவு, சமூகக் கட்டமைப்பு, ஆண் - பெண் வரையறைகள், மனையகங்கள், அன்றைய வாழ்வியல் நடைமுறையில் பழக்கப்பட்டிருந்த நம்பிக்கைகள் மற்றும் புழங்கு பொருட்கள் என்பன போன்றவற்றை ஆய்வு செய்யும் போக்கில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.*

களவியலில் பிரிவும் சமூகக் கட்டமைப்பும்:

இறையனார் களவியல் உரையாசிரியர் கற்பியலில் தலைவனின் ஆறுவகையான பிரிவுகள் குறித்து பேசியுள்ளார். ஓதல், காவல், பகைதணிவினை, வேந்தர்குற்றுழி, பொருள்தேடல், பரத்தமை என்னும் ஆறு பிரிவுகளிலும் தலைவனின் தன்மைகளை எடுத்துரைத்துச் சென்றுள்ளார். பிரிவு குறித்து வரையறை செய்கையில் எந்தெந்த பிரிவு யார் யாருக்கு உரியது என்பதையும் தெளிவுபட சுட்டிக்காட்டுகின்றார். பார்ப்பான் – அரசன் - வணிகன் - வேளாளன் எனும் சமூகக் கட்டமைப்பை இறையனார் களவியல் உரை முதன்மைபடுத்துவதோடு உயர்ந்தோர் - இழிந்தோர் எனும் தன்மையிலும் வருணத்தாரை பாகுபடுத்திக் காட்டியுள்ளது.களவியல் சூத்திரம் 36,39 இல் ஓதலும் காவலும் உயர்ந்தோர்க்கு உரியன என்றும் வேந்தர்க்குற்றுழியும், பொருட்பிணியும் இழிந்தோர்க்கு உரியன என்றும் கூறுவதைக் காணமுடிகின்றது. ஆனால் காதல் பரத்தை எல்லார்க்கும் உரித்தே (இறை.சூ.40) என்ற புதிய கருத்தை இறையனார் களவியல் எடுத்துக்காட்டுகிறது. இக்கருத்தியலை வலுவூட்டும் வகையில் உரையாளர் பரத்தை தலைவனுக்கு உரிமையானவள் என்றும் பரத்தையிற் பிரிந்தான் தலைமகன் என்றால் ஊடல், புலவி, துணி நிகழ ஏதுவாக இருக்கும் என்றும் தலைவியை நீக்கிக் கூடினவிடத்து பெரியதோர் இன்பம் தலைவனுக்கு வெளிப்பட பரத்தையிற் பிரிவு முக்கிய களனாக அமையும் என்றும் எடுத்துக்காட்டுகிறார்.

> 'தலைமகன் தலைமகளை நீங்கித் தருமமும் அருத்தமும் உட்பட்டுத் தலைமகள் மாட்டுப் போதருமிடத்து, அவர் முன்சொன்னவாறே குழலும் யாழும் தண்ணுமையும் முழவும் இயம்புப; இயம்பினவிடத்து, 'இஃது என்னை?' என்னும்; என்றக்கால், 'அது நின் உரிமை அன்றோ' என்ப. அஃது என் உரிமையாயினவாறு என்னை?' என்னும்; என்ற விடத்து, 'நின் குரவர்களான் நினக்கு உரிமையாக வகுக்கப்பட்டார்' என்ப. 'ஆயின் நாம் குரவர் என்றார்க்கு பணிமாறுகொள்ளலாகாது' என்பதனாற் காண்டற்குச் செல்லும்; சென்றானை அவர் தங்கண் நயப்பிப்ப என்பது. இது பரத்தையிற்பிரிவு நிகழுமாறு. (இறை. உரை.1939:214)

இன்னும் கூடுதலாகத் தொல்காப்பியர் பேசாத காவல் பிரிவின் நோக்கத்தை,

> தேவகுலமே சாலையே அம்பலமே என்று இத்தொடக்கத்தனவற்றை ஆராய்தற்கும்... பிறந்த உயிர் தாயைக்கண்டு இன்புறுவதுபோலத் தன்னால் காக்கப்படும் உயிர்....தன்னைக் கண்டு இன்புறுதலின் (இறை. உரை. 1939:197)

என்னும் களவியலின் உரைப் பகுதியின்வழி அறிய முடிகிறது. களவியல் உரையாளர், பொருள்வயின் பிரிவு குறித்த சிந்தனையின்வழி அன்றைய மக்களுக்கு அதாவது செல்வந்தர்களுக்கு இருந்த நம்பிக்கையைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

'தேவர் காரியமும் பிதிரர் காரியமும் தனது தாளாற்றலால் படைத்த பொருளால் செய்தன தனக்குப் பயன்படுவன;என்னை?தாயப் பொருளால் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறார்' (இறை. உரை. 1939:198)

மற்றும் களவியலாளர் காலச் சமூகக் கட்டமைப்பில் உயர்ந்த நிலையில் அதுவும் அரசமரபிற்கு அடுத்த நிலையில் நெருக்கமாக பார்ப்பனர்கள் இருந்துள்ளதை

> தேவர்குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை
> எங்கும் துடைத்து, நீர் தெளித்து, பூவிட்டு (இறை. உரை. 1939:8)

எடுத்துக்காட்டி மதுரை சிவபெருமானை வழிபடும் உரிமை பார்ப்பனர்களிடம் இருந்தது என்பதையும் களவியல் உரை பேசுகிறது. மேலும் பார்ப்பான் பெருமானை வழிபடுகையில் பீடத்தின்கீழ் கண்டெடுத்த இறையனார் களவியல் இதழ்களை காப்பானிடம் உணர்த்த, காப்பான் அரசனிடம் தெரிவிக்க, அரசன் புகுதருக என்று பார்ப்பானை அழைக்க, களவியல் நூல் கண்டடைந்த வரலாற்றை பாயிரச்செய்திவழி அறியமுடிகின்றது. கற்பியலில் பிரிவு குறித்து பேசுகையில் வேந்துவினை இயற்கை பார்ப்பார்க்கும் உரித்தே (இறை.சூ.37) என்று களவியல் நூல் சுட்டியிருப்பதின் வழி பார்ப்பனர்கள் பாண்டியர் காலத்தில் பெற்றிருந்த அரசியல் செல்வாக்கை அறியமுடிகிறது .

புனல் ஓடு வழி சாயும் புல் போன்ற பெண்:

அக இலக்கணத்தை தனித்த நிலையில் எடுத்தியம்பும் இறையனார் களவியல் நூலானது நூலின் பயனாக வீடுபேறு கிடைக்கும் என்பதை முதன்மைப்படுத்தக் காணலாம். மக்கள்

வீடுபேற்றினை அடைய பெண்ணுடல் என்பது பெரும் தடையாக இருக்கின்றது என்பதை மூன்று வகைப்பட்ட மக்களைக் கருத்தில்கொண்டு களவியல் உரையாசிரியர் விளக்குகிறார். தலையாயினர் பெண்ணோடு கொள்ளும் உறவு தீது என்று அறிந்து பெண்ணை விலக்கிவிடுவர். பெண்ணோடு உறவுகொள்வதால் பல்வேறு பாவங்களும், குற்றங்களும் நிகழும். எனவே இதை நீங்கி அவர்கள் பெண்ணின்பத்தை வெறுப்பர் என்று களவியல் உரை கூறுகின்றது. இதனை,

> *அறுவகைப்பட்ட பாசாண்டிகரும் இணைவிழைச்சுத் தீதென்ப. அஃது உண்டாமிடத்துச் சுற்றத்தொடர்ச்சி உண்டாம்; உண்டாகவே, கொலையே, களவே வெகுளியே செருக்கே மானமே என்று இத்தொடக்கத்துக் குற்றம் நிகழும் என்பது. அது கேட்கவே தலையாயினார் அதன்கணின்று நீங்குவர். (இறை. உரை.1939:11,12)*

என களவியல் உரைப்பகுதி எடுத்துரைக்கின்றது. இடையாயினர் பெண்ணுடலின் அசுபத்தன்மை கேட்டு நீங்குவர். பெண்ணுடல் பார்ப்பதற்குதான் அழகாக இருக்குமே தவிர, அவ்வுடல் எல்லா நிலைகளிலும் நாற்றம் தரக்கூடிய ஒரு பொருள் என்பதை இடையாயினார் நன்கு உணர்ந்தவர்கள் எனக் களவியல் உரை சுட்டிக்காட்டுகிறது.

> *இடையாயினார் பெண் என்பது எற்புச் சட்டகம், முடைக்குரம்பை, புழுப் பிண்டம், பைம்மறியா நோக்கப் பருந்தார்க்கும் தகைமைத்து. ஐயும் பித்தும் வளியும் குடரும் கொழுவும் புரளியும் நரம்பும் மூத்திரபுரீடங்களும் என்று இவற்றது இயைபு. (இறை. உரை.1939:12)*

கடையாயினர் எத்திறத்தானும் நீங்கார்.எனவே வீடுபேற்றை மக்கள் உழைப்பாலும் வலியாலும் வனப்பானும் பொருளாலும் பெற முடிவது அன்று; தவம் செய்து பெற முடிவது என்பார் களவியல் உரையாசிரியர். இதன்மூலம் பெண்வழிச்சேரல் பற்றிய பொது வரையறைகளைக் களவியல் உரை தம் சைவசமயப் பின்புலத்தில் கட்டமைத்துச் செல்கின்றது எனலாம். மேலும் களவு என்னும் சொல்லே ஆண்களைப் பெண்ணிடமிருந்து வஞ்சித்துக் கொண்டுசென்று வீடுபேறடையச் செய்வது என்பதாகவே களவியல் உரையில் விளக்கப்பட்டுள்ளது.

> *அதுதான், பிறப்புப் பிணி மூப்புச்சாக்காடு அவலக்கவலை கையாற்றினீங்கி, மணியினது ஒளியும் மலரினது நாற்றமும் சந்தனத்துத் தட்பமும்போல உண்ணின்று எழுதரும் ஒரு பேரின்ப வெள்ளத்தது என்பது கேட்டு, அதனைவிட்டு வீடுபேற்றின் கண்ணே அவாவி நின்று, தவமும் ஞானமும் புரிந்து வீடு பெறுவானாம். அவனை வஞ்சித்துக் கொண்டுசென்று, நன்னெறிக்கண் நிறீயினமையின் களவியல் என்னும் குறிபெற்றது. (இறை. உரை.1939: 13)*

என்பதன்வழி களவியலின் நோக்கம் உரையில் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

> *தலைமகட்கு நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்பன குணம்...இந்நான்மையும், புனல் ஓடு வழியிற் புற்சாய்ந்தாற் போல, வேட்கையால் மீதூரப்பட்டுச் சாய்ந்து கிடப்பது. (இறை. உரை.1939:39)*

மேலும் வண்டோரனையர் ஆண் மக்கள்,பூவோரனையர் பெண் மக்கள் ஆண் மக்களின் பரத்தமை ஒழுக்கத்தை மகளிர் ஏற்றுக்கொள்ள வேண்டும்,பெண்டிர்க்கு அறமென்பது கற்பு,பெண் கணவனையன்றி யாரையும் தொழக்கூடாது, அது கற்புக்கு இழுக்கு, எக்காலத்தும் தலைவி ஒரு தன்மையளாக இருத்தல் வேண்டும், தலைவன் முன் தலைவி தன்னை புகழ்தல் கூடாது, ஊடலும் புலவியும் தலைமகளுக்குக் கூடாது என்றும் பெண்கள் இல்லிருந்து இறைவழிபட்டு, மக்களை வளர்த்து, விருந்து புறந்தருவதல்லது போகத்துள்ளாமன்றே என்றும் பெண் குறித்த எல்லையை வரையறை செய்கிறது களவியல். இவ்வாறாக கட்டமைக்கபட்ட பெண் குறித்த பதிவுகளை உள்வாங்கி ஆய்வாளர் இராம சுந்தரம் களவியல் காட்டும் சமூகம் பெண்ணை அடிமைப்படுத்திய சமூகம் என்கிறார். மேலும் பெண் நிலை குறித்து களவியலும் உரையும் என்னும் ஆய்வுக்கட்டுரையில் செ.வை.சண்முகம் அவர்கள் தன்னை அழிதலும் கிழவோற்கு இல்லை (இறை.சூ.31) என்பதைச் சுட்டிக்காட்டி களவியல் காலத்தில் பெண் சமூகம் இழிவுப்படுத்தப்பட்டுள்ளதாக கூறியிருப்பது கூடுதல் கவனத்திற்குரியது.

அரசன் தேவர்களின் பிரதிநிதி:

பக்தி இலக்கியக் கால சைவப்பின்புலத்தில் உருவாக்கம்பெற்ற இறையனார் களவியல் நூலைக் காட்டிலும் உரையானது உயர்ந்த சமூகம் சார்ந்த ஆணையே / அரசனையே முன்னிறுத்துகின்றது.

*பாண்டியர் குலத்துள் தேவர்களே தோன்றுவர் (இறை. உரை.1939:42)*
*களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்*
*உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன (இறை.சூ. 60)*

என்றதற்கு களவியல் உரையாசிரியர் கொடுக்கும் விளக்கம் கூடுதல் கவனத்திற்கு உரியது.

*தேவர்க்கும் நாகர்க்கும் இவ்வொழுக்கம் அவர் உலகத்திலில்லை என்பார், ...அன்பின் உயர்ச்சி எனவே, அஃதில்லாவிடத்து இவ்வொழுக்கங்கள் நடைபெறா என்பதூஉம், அதனானே அஃது உயர்ந்தோர் மாட்டது என்பதூஉம் அவருள்ளும் அரசர்க்கே சிறந்தது என்பதூஉம் பெற்றாம். (இறை. உரை.1939:252,253)*

என்று இதனை அரசர்க்கு உரிய ஒழுக்கமாகவே களவியல் உரை வரையறை செய்கின்றது. நூலானது அரசனை முதன்மைப்படுத்தாத நிலையில், உரையானது அரசனை முதன்மைப்படுத்தியும், அரசனது காதல் வாழ்வை முதன்மைப்படுத்தியுமே நிற்கின்றது எனலாம்.

களவியல் உரை வழி அறியவரும் மனையகங்கள்:

இரவுக்குறியின் போது, தலைவிக்கான எல்லையைப் பற்றி பேசும் களவியல் உரை மனையகம் குறித்து எடுத்துச்சொல்லியிருப்பதின் வழி களவியல் காலத்தில் மக்கள் அதாவது செல்வந்தர்கள் புழங்கிய இடங்கள் குறித்து அறிய முடிகின்றது. (இறை. உரை.1939: 142,239)

*அட்டில் -சமையலறை*
*கொட்டகாரம் – பண்டங்கள் வைக்கும் அறை*
*கூடகாரம் – மேல்மாடம்*
*உரிமையிடம் – அந்தப்புரம்*
*பள்ளியம்பலம் – துயிலிடம்*
*கூத்தப்பள்ளி – அரண்மனையைச் சார்ந்த நாடகச்சபை*
*கடிமனை – மண வீடு*

களவியல் உரை காட்டும் பண்பாட்டு அடையாளங்கள்:

இறையனார் களவியல் முதல் சூத்திரத்திலேயே அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள் (இறை.சூ.1) என்பதை சுட்டிக்காட்டியிருப்பதின் வழி பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன போன்ற மகட்கோடலாறு முறை இருந்துள்ள தன்மை பற்றியும் திங்கள் இரண்டின் அகமென மொழிப (இறை.சூ.32) அதாவது களவுக்காலம் இரண்டுமாதத்துக்கு மேல் நீட்டிக்கக் கூடாது என்ற சமூகத்தின் ஒழுக்க உணர்வையும் பதினோராண்டு பத்துத் திங்களும் புக்க தலைமகளோடும் பதினையாண்டும் பத்துத் திங்களும் புக்க தலைமகனைப்போலும்(ப.189) என்பதின்வழி திருமண வயது வரையறைக்கு உட்பட்டது என்பதையும் தலைவன் தலைவிக்கு கையுறை பாரட்டிச் சென்று நிற்றல்(ப.77), முலைவிலை(ப.146) கொடுக்கும் வழக்கம் இருந்ததையும் களவியல் உரைவழி அறியமுடிகின்றது. மேலும்,

*உலகத்துச் சூளுறுவார் பசுவையும் பார்ப்பாரையும் பெண்டிரையும் தொட்டுச் சூளுறுவராகலான் (இறை. உரை.1939: 135)*

என்று சுட்டியிருப்பதால் சூள்கொண்ட முறை குறித்தும் மடலூர்தலும் வரைபாய்தலும் தலைவன் தன் தலைவியை அடைதற்கு மேற்கொள்ளும் வழக்கம் இருந்ததையும் களவியல் உரை வழி அறியமுடிகின்றது. களவியல் காலத்து ஊர்கொண்ட பெருவிழா என ஆவணி அவிட்டம், உறையூர்ப் பங்குனிஉத்திரம், கருவூர் உள்ளிவிழா பற்றிய செய்திகளும் களவியல் உரையில் சுட்டிக்காட்டக் காணலாம்(ப.125). மேலும்,

*சங்கத்தாரைக் கூவுவித்து நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்! அதனைக்கொண்டுபோந்து கண்மாப்பலகை எறியிருந்து ஆராய்வுழி (இறை. உரை.1939: 8)*

என்பதின்வழி களவியல் காலத்து நூலறிபுலவர்கள் நூல் திறன் அறிந்து ஏற்கும் வழக்கமுடையவர்கள் என்பது தெளிவாகிறது.

*களவியலில் புழங்குப் பொருட்கள்:*

*இறையனார் களவியல் உரைவழி பலவகைப்பட்ட பயன்பாட்டுப் பொருட்கள் குறித்தும் அறிய முடிகின்றது. வீட்டு உபயோகப்பொருட்கள், சடங்கிற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள், போர்க்கருவிகள், பழக்கவழக்கங்கள் எனும் வகைமைகளில் காணமுடிகின்றது.*

*படிமக்கலம் – கண்ணாடி (ப. 119)*
*அந்தணர் குடையும் கரகமும் கொள்ளல் (ப.156,158)*
*ஆலவட்டம் – விசிறி (ப.37)*
*பாலிகை – கலியாண காலத்தில் முளைகள் உண்டாக நவதானியங்களை விதைத்து வைக்கும் தாழி (ப.221)*
*நாண்வழிக் காசு போல -கயிறு, பொன் நாணயம்(ப.39)*
*திரிபன்றி – பன்றி வடிவாய் அமைக்கப்பட்ட சுழலும் குறி (ப.29)*
*குறுணி – எட்டுப்படி கொண்ட முகத்தலளவை (ப.149)*
*நாண்வழிக் காசு போல (ப.39)*
*நீர்வழி மிதவை போல (ப.39)*
*கொழு சென்றவழித் துன்னூசி இனிது செல்லும் (ப.1)*
*கடுத்தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றியவாறு (ப.12)*
*ஐந்திணை மஞ்சிகை,ஐந்திணையாடை(ப.25)*

*முடிவாக இறையனார் களவியல் நூல் மற்றும் உரை உருவாக்க வரலாறு,முச்சங்க வரலாறு வழி பாண்டியர்களை முன்னிலைப்படுத்தியும் சைவசமயத்தை வலியுறுத்தும் தன்மையில் நூலின் பயனை முதன்மைபடுத்தும் நோக்கிலும் அமைந்துள்ளது. களவியல் காட்டும் சமூகம் ஆணுக்கு ஆதரவாகச் செல்வந்தர்கள் காதலைப் போற்றும் சமூகமாகவும் பெண்ணை அடிமைப்படுத்திய சமூகமாகவும் விளங்கக் காணலாம். தொல்காப்பியம் மானுடக் காதலை முன்னிறுத்த இறையனார் களவியல் பெண் சமூகத்தை துறந்தநிலையில் மாந்தர்க்கும் கடவுளுக்கும் உள்ள பேரின்பக் காதலை பேசும் ஓர் ஆதார அக இலக்கண நூலாக இருக்கிறது எனலாம்.*

*துணைநூற்பட்டியல்*

*களவியல் என்னும் இறையனார் அகப்பொருள் மூலமும் நக்கீரனார் உரையும், கா.ர. கோவிந்தராஜ முதலியார், மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப.ஆ.), பவானந்தர் கழகம், சென்னை, 1939*

*சண்முகம், செ.வை., இலக்கண உருவாக்கம் 1 பல்லவ – பாண்டியர் காலம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1994.*

*சீனிவாசன், இரா., தமிழ் இலக்கண மரபுகள் கி.பி. 800 - 1400, இலக்கண நூல்களும்உரைகளும், திபார்க்கர், சென்னை, 2000.*

*சீனிவாசன், இரா., பூவா வேங்கை, பரிசல் வெளியீடு, சென்னை,2021.*

*சுந்தரம், இராம., சொல் புதிது சுவை புதிது, தமிழ் நூலகம், சென்னை, 1978.*

*சுப்பிரமணிய ஐயர், ஏ.வி., தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, மெய்யப்பன் பதிப்பகம், 2005.*

*தாமோதரன், அ., இறையனார் களவியல், செம்மொழித் தமிழாய்வு மத்தியநிறுவனம், சென்னை, 2013.*

*வசந்தாள், த., தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் – ஒரு வரலாற்றுப் பார்வை, சென்னைப் பல்கலைக்கழகம், 1990.*

*ஜானகி.இரா., இறையனார் களவியல் உரை : களவியல் காட்டும் அகமரபும் உரைமரபும், பரிசல் வெளியீடு, சென்னை,2021*

********* ********* ********** ********* ********* ********** ********** **********